DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - திரு.தனபால் | **PW-9** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

**(1 வது எதிரி ஆஜர், 2, 3, 5 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை, குவிமுச.317 மனு அனுமதிக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது ஈரோடு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைக் கொண்டு வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க உயர் அதிகாரியிடம் அனுமதி சான்று பெற்று வந்துள்ளேன்.

2) முத்திரைத்தாள் விற்பனையாளர் சி. பழனிச்சாமி என்பவரின் முத்திரைத்தாள் விற்பனை உரிமம் எண்.17098/67 சம்பந்தப்பட்ட, சி. பழனிச்சாமி என்பவரால் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் திரும்ப ஒப்படைக்கப்பட்ட விற்பனைத்தாள் பதிவேட்டின் தொகுதி எண்.388, நாள்.08.01.2003 முதல் 14.12.2005 வரையிலான பதிவேடு மற்றும் அதன் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன்.

மேற்படி சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.**8 ஆகும். மேற்படி ஆவணத்தின் படி முத்திரைத்தாள விற்பனையாளர் சி. பழனிச்சாமி என்பவரால் 29.07.2005 ம் தேதி எம்.முத்துசாமி, பூமாண்டன்வலசு என்பவருக்கு வரிசை எண்.16270 முதல் 16280 முடிய ரூ.10/- மதிப்புள்ள 11 முத்திரைத்தாள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

3) மேற்படி முத்திரைத்தாள் விற்பனையாளர் சி.பழனிச்சாமி என்பவரது முத்திரைத்தாள் விற்பனை உரிமத்தை நிரந்தரமாக ரத்து செய்து ஈரோடு மாவடம் பதிவாளர், நிர்வாகம் அவர்கள் கடந்த 116.10.2017 ல் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி உத்தரவின் சான்றிட்ட நகல் **சா.சா..**9 ஆகும். தற்போது அவரது உரிமத்தை நிரந்தரமாக ரத்து செய்த பிறகு மேற்படி முத்திரைத்தாள் விற்பனையாளர் பழனிச்சாமி முத்திரைத்தாள் விற்பனை எதுவும் செய்வதில்லை. இது தொடர்பாக சென்னிமைலை சார் பதிவாளர் கொடுத்த கடிதத்தின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.**10 ஆகும். மேற்படி பழனிச்சாமி என்பவர் மீது எங்கள் அலுவத்கதிற்கோ அல்லது வேறு அலுவகத்திற்கோ எந்த புகாரும் வரவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.373/2022**

Deposition of Witness

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 29 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - திருமதி.கோமதி **PW-10** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | தொழில் | - |
| கிராமம் | - | சமயம் | - |
| தாலுக்கா | - | வயது | - |

**(1 வது எதிரி ஆஜர், 2, 3, 5 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை, குவிமுச.317 மனு அனுமதிக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது எடப்பாடி வட்டம், வட்ட வழங்கல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைக் கொண்டு வந்துள்ளேன். குருசாமி என்பருக்கு 2005 - 2009 கால ஆண்டில் வழங்கப்பட்ட பழைய குடும்ப அட்டை எண்.10/G/0175043 க்கு பதிலாக புதிய மின்னணு குடும்ப அட்டை எண்.333491500252 ஆனது 07HP035P1-புதுப்பட்டி என்ற நியாய விலைக்கடைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2) மேற்படி குடும்ப அட்டை தற்போது அவர் உபயோகப்படுத்தி வருகிறார். மேற்படி பழைய குடும்ப அட்டை புதுப்பட்டி நியாக விலைக்கடைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்படி புதிய மின்னணு குடும்ப அட்டைக்கு கடந்த 25.02.2023

அன்று புதுப்பட்டி நியாக விலைக்கடையில் புழுங்கல் அரிசி - 16 கிலோ, மண்ணெண்ணெய்-3 லிட்டர், சர்க்கரை-1 கிலோ, சமையல் எண்ணெய்-1 லிட்டர், துவரம்பருப்பு-1 கிலோ ஆகிய அத்தியாவசிய பொருட்கள் பயோ மெட்ரிக் முறையில் குருசாமியால் பெறப்பட்டுள்ளது. மேற்படி குடும்ப அட்டை குருசாமி, த/பெ.சின்னத்தம்பி, 105, புதுப்பட்டி, வெள்ளரிவெள்ளி, எடப்பாடி தாலுக்கா, சேலம் என்ற முகவரியில் வழங்கப்பட்டுள்ளது.

3) மேற்படி குடும்ப அட்டையில் குடும்ப தலைவர் புகைப்படமாக குருசாமி என்பவருடைய புகைப்படம் உள்ளது. குடும்ப அட்டை எண்.10/G/0175043, மின்னணு அட்டை எண். 333491500252 குடும்ப அட்டைக்கான விவரங்களின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.11** ஆகும். மேற்படி குடும்ப அட்டையில் குடும்பத்தலைவரின் ஆதார் கார்டு எண் மற்றும் அவரது செல்பேசி எண் சா.சா.ஆ.11 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.**